112811

# திருப்பந்தணைநல்லூர் ஆலய வரலாறு

O23:38 2193 T
N56
112811

290

# திருப்பந்தணைநல்லூர்
# ஆலய வரலாறு

OFFICE OF THE REGISTRAR OF ...
17 JUL 1956
MADRAS

290
3-56

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."

— திருக்குறள்.

Q23:38.2...
N56

...லய வெளியீடு
1956

திருச்சிற்றம்பலம்

தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலூகா

திருப்பந்தணைநல்லூர்

# ஸ்ரீ பசுபதீஸ்வரர்

## ஆலய வரலாற்றுச் சுருக்கமும், பதிகங்களும்.


பரம்பரை டிரஸ்டி.

திரு. P. பெத்துராஜன் அவர்கள்

பந்தணைநல்லூர்.



ஆக்கியோன

ஆலய நிர்வாக அதிகாரி,

பந்தணைநல்லூர்.




விலை 0—8—0

Q 93:38 · 3.1193.TR
N56

112811

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works
Ltd. T. H. S. Road, Kumbakonam and Published by
T. N. Bhaskaram Pillai, Executive Officer,
Sri Pasupatheeswarar etc. Temples,
Pandanallur 30-8-56

## பந்தணைக் கோட்டை நிலப்படம்.



பின்பக்கம் பார்க்க.

## பந்தணைக் கோட்டை நிலப்படம்.

1. பந்தநல்லூர் போலீஸ் ஸ்டேஷன்
2. அணைக்கரை — குத்தாலம் பஸ் ரஸ்தா.
3. காம்பீலி மன்னன் வீதி.
4. கோட்டை ஆஞ்சநேயர் சன்னிதி.
5. கோட்டை விநாயகர் சந்நிதி.
6. காம்பீலி மன்னன் வீதி.
7. திருக்குளம்.
8. முன்கோபுரம்,
9. ஸ்ரீ பசுபதீஸ்வரர் சன்னிதி.
10. காம்பீலி மன்னன் வீதி.
11. ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் முன்வீதி.
12. ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் சன்னிதி.
13. செம்பியன் மாதேவியார் வீதி.
14. இராச ராச சகஸ்ரபாகு வீதி.
15. ஆதிச்சபிள்ளை வீதி.
16. பரகேசரிவர்மன் வீதி.
17. அரண்மனைத் திடல்.
18. திறந்தவெளித் திடல்.
19. தேர்முட்டி.
20. இராணி மாடம்.
21. தென்னை இலுப்பை மாந்தோப்புகள்.
22. கோட்டை மேடு.
23. அகழிகள்.



## முன்னுரை

பொதுமக்களும், யாத்திரிகர்களும், பக்தர்களும், மற்றும் சிறுவர் சிறுமியர்களும் ஆலய வரலாற்றை அறிந்துகொள்ள விரும்புவது இயல்பு. ஆண்டவன் திருவிளையாடல்கள் தலத்துக்குத் தலம் மாறுபடும். ஒவ்வொன்றையும் படித்து அறிந்து பக்தியால் பாடிப் பரவசமடையப் பல மெய்யன்பர்கள் ஆசைப்படுகின்றனர். அவ்விருப்பத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஆலய நிர்வாகத்தினர்பால் பட்டமையின் எமது தலைவர்கள் சுற்றறிக்கை மூலம் வரலாற்றுச் சுருக்கம் ஒன்றை வெளியிடக் கட்டளையிட்டனர்.


சென்ற சிலமாதங்களாக ஆலயத்தில் தேவார வகுப்பு ஆரம்பம்செய்து ஆலயத் தேவாரஆசிரியரால் சுமார் பதினைந்து பிள்ளைகளுக்கு முறைப்படி தேவாரம் கற்பிக்கப்பட்டுவருகிறது. மேலும் எமது விருப்பத்துக்கிணங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை நாலு மணிக்குத் திருப்பந்தணைநல்லூர் "ஸ்ரீபசுபதி உயர்தர ஆரம்ப பாடசாலை", "கழக ஆரம்பப்பள்ளி" ஆகிய இரண்டு பாடசாலை ஆசிரியர்களும், மாணவ மாணவிகளுமாகச் சுமார் நானூற்றுவர் வாரக் கூட்டுவழிபாடு செய்துவருகின்றனர். ஆசிரியர்களின் ஒத்துழைப்பும், சிறுவர்களின் வளர்ச்சியான உற்சாகமும், பொதுமக்களின் அன்புநிறைந்த கனிவும் இவண் போற்றற்பாலன. அன்னோர்க்கு இத்தலத்தின் சுருக்க வரலாறும், இத்தலத் தேவாரம், திருப்புகழ், அருட்பா, இதர பக்திவிளக்கப் பாடல்கள் இவற்றை அறிவித்துவைக்கும் உணர்ச்சி கலந்த கடமையின்பாற்பட்டும் விரைவில் இவ்வெளியீட்டை அளிக்க

முன்வந்தேன். படித்தின்புற்று, பண்புபெற்று, பக்தியால் பாடி மக்கள் சன்மார்க்க நெறியில் நிற்பாராகில் சென்னை H. R. & C. E. இலாக்கா ஆணையாளர் திரு. A. உத்தண்டராம பிள்ளை, I. A. S. அவர்கள், துணை ஆணையாளர் திரு. S. கணேசம் பிள்ளை, B. A. அவர்கள், மேலத்தஞ்சை உதவி ஆணையாளர் திரு. A. சர்க்கரைச் சேர்வை, B. A., B. L, அவர்கள் ஆகிய மூவர் நோக்கமும், முயற்சியும் மிக்க பலன் தருவதாகும்.

மற்றும் இத்தலச் சுருக்கம் வெளியிடும் முயற்சியில் செய்யுளில் தல வரலாறு குறிக்கும் கையெழுத்துப் பிரதியைக் கொடுத்துப் பெரிதும் துணைபுரிந்த பந்தணைநல்லூர் திரு. நாகலிங்கம் செட்டியார் அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன். சில ஏட்டுக் குறிப்பும், ஓலைக்குறிப்பும் கொடுத்துதவிய பந்தணைநல்லூர் திரு. முத்துப் பிள்ளை அவர்களுக்கும், ஓலைச்சுவடியை வாசித்துக் காண்பித்த திரு. நாகலிங்க பண்டாரத்துக்கும் என் நன்றி உரித்தாகுக. அன்றியும் கல்வெட்டுகளை முயன்று படித்து விளங்கும் தமிழில் எழுதிக் கொடுத்த திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்களுக்கும் பல நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். மற்றும் பலசில குறிப்புக்களைத் தந்துதவிய பலருக்கும் என் அன்பும் நன்றியும் உரியதாகும். மேலும் சிறப்புப்பாயிரம் வழங்கி பிழை திருத்தி வெளியீட்டை அழகு அமைத்து அச்சேற்ற பேருதவி செய்த சித்தாந்த சைவமணி, திருவாவடுதுறை ஆதின வித்வான் திரு. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திருப்பந்தணைநல்லூர் 18—1—1956.

T. N. பாஸ்கரம் பிள்ளை,
நிர்வாக அதிகாரி.



திருப்பந்தணைநல்லூர் ஆலயங்களின் நிலப்படம்.

நிலப்படம் பார்க்க.

## திருப்பந்தணைநல்லூர் ஆலயங்களின் நிலப்படம்.

1. காம்பிலி மன்னன் வீதி
2. கம்போச மன்னன் காந்தன் துறை
3. திருக்குளம்
4. சீராழி மண்டபம்
5. நந்தி மண்டபம்
6. ஞானசம்பந்தன் வாயில்
7. கொடிமரம்
8. பலிபீடம்
9. நந்தி
10 இராமலிங்கம் திருவாயில்
11. திருக்கல்யாண மண்டபம்
12. நாவுக்கரசன் வாயில்
13. ஸ்ரீ பசுபதீஸ்வரர்
14. அருணகிரிவாயில் + ஆறுமுகப்பெருமான்
15. ஸ்ரீ கல்யாணசுந்தரமூர்த்தி
16. ஸ்ரீ உத்சவ சுப்ரமண்யர்
17. வெள்ளிவாகன அறை
18. ஸ்ரீ சோமாஸ் கந்தர்
19. மடப்பள்ளி
20. மாலைகட்டி அறை
21. அறுபத்துமூவர் சந்நிதி
22. ஸ்ரீ தெக்ஷிணாமூர்த்தி
23. சட்டநாதர்
24. ஸ்ரீ விநாயகர்
25. ஸ்ரீ முருகன்
26. ஸ்ரீ கெஜலக்ஷ்மி
27. ஸ்ரீ அன்னபூர்ணி
28. ஸ்ரீ சரஸ்வதி
29. ஸ்ரீ துர்க்கை
30. தலவிருக்ஷம் சரக்கொன்றை
31. ஸ்ரீ சண்டிகேசுரர்
32. ஸ்ரீ நடராஜா
33. நெல் மண்டபம்
34. நவக்கிரகம்
35. வசந்த மண்டபம்
36. மௌனகுருவாயில்
37. ஸ்ரீ தோளியம்மை
38. ஸ்ரீ கண்வர் பூசித்த லிங்கம்
39. ஊஞ்சல் மண்டபம்
40. நெல் குத்தும் மண்டபம்
41. பிரகார நந்தவனம்
42. யாகசாலை
43. தேவஸ்தான காரியாலயம்
44. ஸ்டோர் ரூம்
45. கோட்டை முனியாண்டவர் சன்னிதி
46. சிப்பந்திகளின் விடுதிகள்
47. do do
48. காம்பிலி மன்னன் வீதி
49. ஸ்ரீ பெருமாள் முன்வீதி
50. பெருமாள் கோபுர முன்வாசல்
51. பலிபீடம்
52. கொடிமரம்
53. கருட மண்டபம்
54. ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள்
55. ஸ்ரீ சீனிவாசப் பெருமாள்
56. மடப்பள்ளி
57. வசந்த மண்டபம்
58. ஸ்ரீ பரிமளவல்லித் தாயார்
59. பிரகார நந்தவனம்
60. தோட்டம்
61. நந்தவனம்.

உ

சிவமயம்

# திருப்பந்தணைநல்லூர் ஆலய வரலாறு

அன்பே வடிவாய்க்கொண்டு விளங்கும் இறைவன் ஆன்ம கோடிகள் தம்மை வழிபட்டுய்யும் வண்ணம் கோவில் கொண்டு விளங்காநிற்கும் திருத்தலங்கள் நம் தென்னாட்டில் பலவுண்டு. அவற்றுள் காவிரி வளம்பெருக்கும் சோழ நாட்டில், தஞ்சை ஜில்லா, கும்பகோணம் தாலூகாவிலுள்ள திருப்பந்தணைநல்லூர் கும்பகோணத்திலிருந்து பதினெட்டாவது மைலில் பஸ் தொடர்பு கொண்டும், குற்றாலத்திலிருந்து ஆறுகல் தொலைவில் பஸ்தொடர்பு கொண்டும், கொள்ளிடம் நதிக்குத் தென்பாலும் மண்ணி என்னும் புண்ணிய நதிக்கு வடபாலும் அமைந்து மரகத மலைக்கூட்டம் போன்ற காட்சியினிடையில் ஊரினின்று ஒதுங்கித் தனியே நாற்புறமும் அகழிசூழத் திகழும் திருத்தலமாகும்.

## இத்தலத்தின் பல பெயர்கள்

1. தென்கயிலை
2. கோவூர்
3. கொன்றைவனம்
4. பானுபுரம்—கதிரோன்புரி
5. விட்டுணுபுரம் விண்டுர்—வேணுபுரி
6. இந்திரபுரி
7. கண்ணுவராச்சிரமம்
8. வாலிநகர்
9. அன்னமிடுமெய்ப்பேரூர்
10. கந்துகாபுரி
11. ஆவூர்
12. பந்தணைநல்லூர்

என்பன.

ஆண்டவன் பெயர் – ஸ்ரீ பசுபதீஸ்வரர்

அம்பிகை பெயர் – 1. வேணுபுஜாம்பிகை
2. காம்பேய் தோளி

பெருமாள் பெயர் – ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள்

தாயார் பெயர் – பரிமளவல்லித்தாயார்

மூலக்கோவிலாகிய ஸ்ரீ பசுபதீஸ்வரர் ஆலயமும், துணைக் கோவிலாகிய ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் ஆலயமும் ஒரே பொது மதிலுக்கு இருமருங்கிலும் சுற்றுப் பெருமதில்களைக்கொண்டு தனித்தனியே கிழக்கு நோக்கி அமைந்துள்ளன.

பூஜைகள்:– தினபூஜை:– ஆறுகாலம்.

மாத உற்சவங்கள்:– சகலமும்.

பிரமோத்ஸவம்:– மாசிமாதம் மகநட்சத்திரம்.

தீர்த்தம்:– சூரிய தீர்த்தம்: நாற்புறமும் மதில்களுடனும் நடுவில் நீராழி மண்டபத்துடனும் மூலக்கோவிலாகிய சிவன் கோவிலுக்கு எதிரில் அமைந்திருக்கிறது.

தலத்தின்தரு:– சரக்கொன்றை: சிவன் கோவில் உட்பிரகாரத்தில் வடக்குப் பக்கம் மூலவருக்கு இடது பாரிசத்தில் மேடைமீது அலங்காரமாய்க் காட்சியளிக்கிறது.

வாகனங்கள்:– மர வாகனங்கள் யாவற்றுடனும், மரப் பல்லக்குகளும் உண்டு. மேலும் இரண்டு வெள்ளிக் காளைவாகனங்கள்: ஒரு வெள்ளி மயில்வாகனம்: ஒரு வெள்ளிப் பல்லக்கு முதலியனவும் உண்டு.

தேர்கள்:– சுவாமிக்கு ஒன்றும், அம்பிகைக்கு ஒன்றுமாகத் தனித்தனியே உண்டு. ஆண்டுதோறும் மாசிமக உற்சவத்தில் தேரோட்டம் நடைபெறுகிறது.



கோட்டையுள்ளே சென்றதும் கோயிலின் முழுத்தோற்றம்



"சிவ சிவ"

திருஆபரணங்கள்:— போதுமான அளவு சிறந்த ஆபரணங்கள் இருக்கின்றன. சர்க்கார் ஆபரண மதிப்பீட்டாளர்கள் அண்மையில் பரிசோதித்து அவற்றை மதிப்பிட்டிருக்கின்றனர்.

சொத்துக்கள்:— நன்செய் நூறு (100) வேலி. புன்செய் முப்பது (30) வேலி. கட்டிடங்கள், மனைக்கட்டுகள் பல உண்டு. மொத்த இருப்பு சர்க்கார்க் கடன் பத்திரங்களிலும், பாங்கிகளிலுமாகச் சுமார் ($1\frac{1}{4}$) ஒன்றேகால் இலட்ச ரூபாய் இருக்கிறது.

ஆண்டு வருமானம்:- ரூ. 78000.

சென்ற சில மாதங்களாகப் பால்காவடித் தொண்டர் நியமிக்கப்பட்டுச் சுற்றுவட்ட கிராமங்களில் பால்சேகரம் செய்தும் பசுக்கள் வளர்ப்பதன் மூலம் பால் பெறப்பட்டும் ஆண்டவனுக்கு அபிஷேக ஆராதனைக்குப் போதுமான அளவு உபயோகித்துக் கொண்டு எஞ்சியதைத் தேவாரவகுப்புச் சிறார்களுக்கு சுண்டல் தோசை இவைகளுடன் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. தேவையான குங்குமம் கோவிலிலேயே தனி மஞ்சளால் செய்யப்படுகிறது.

நந்தவனம்:— சிறப்பாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

திருப்பணிகள்:— முக்கியமாய்ச் செய்யவேண்டிய பல திட்டங்கள் துணை ஆணையாளர் அவர்களால் அங்கீகாரம் செய்யப்பட்டு வேலை துவக்கப்பட்டு வருகிறது.

நூல் நிலையம்:— பொதுமக்களுக்குக் கடவுட் பக்தியும், சமய அறிவும், தமிழ் அறிவும் வளர்க்கும் வகையில் கோயிலைச்சார்ந்த நூல் நிலையம் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது. இப்போது சுமார் 250 அச்சுப்புத்தகங்கள் வரை சேர்க்கப்பட்டுள்ளன. மக்கள் நாடோறும் படித்துப் பயன்பெற்று வருகின்றனர்.

கல்வெட்டுகள்:— பேசும் கற்களும், சிரிக்கும் கற்களும் பல உண்டு.

திரு வை. சுந்தரேச வாண்டையார் எனும் அறிஞர்படித்துக் குறித்துக்கொடுத்ததாய் உணரப்படும் கல்வெட்டுச் சுருக்கம். சரித்திர காலத்துப் பிற்காலச் சோழர் கல்வெட்டுக்களிலிருந்து நிர்வாகம்பற்றிய சிற்சில குறிப்புகள் கிடைக்கின்றன. வேளாண் குடியினர் ஒருவர் இச்சிற்றூரில் சீருஞ் சிறப்புமாய் வாழ்ந்தனரெனக் காணப்படுகிறது. வீரசோழ அனுக்கர் கைக்கோளர் வேளான் பெருங்குடி மகனார் ஆகிய மூவரும் இக்கோவில் நிர்வாகத்தை ஏற்று நிலங்களைக்கண்காணித்து வந்தனர். ஆனால், கண்காணிப்பு செவ்விதின் இன்மையால் கண்காணிப்பு குடிமக்களிடமே மாற்றப்பட்டதாகப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் செங்கோலோச்சியவனும் இராசராச மாபுரம் என்ற கலைக் குன்றும் தாராசுரம் கோவிலை எழுப்பியவனுமான இரண்டாம் இராசராசன் காலத்துப் பந்தணைநல்லூர்க் கல்வெட்டொன்று கூறுகிறது.

இத்தலத்து ஆதிகேசவப்பெருமாள் கோயில் கருக்கிரகச் சுவரின் வெளிப்புறங்களில் இக்கல்வெட்டு உள்ளது.

காட்டூர் கோமடத்திலிருந்த தக்ஷிணாமூர்த்தி பட்டர் மகன் நம்பிபட்டரும் அவருடைய மனைவியும் இக்கோவிலில் காலை மாலை இருபொழுதும் தீபம் போடவேண்டிப் பந்தணைநல்லூரில் வாழ்ந்த திருவையாற்றுச் சிவலோகன் என்னும் அந்தணரிடம் இரண்டு காசைக் கொடுத்திருந்தார்கள். இது சிவன்கோயில் மகா மண்டபம் தென்புறச் சுவரிலுள்ள இராசகேசரிவர்மன் காலக் கல்வெட்டு.

உத்தம சோழதேவருடைய தாய் செம்பியன்மாதேவியார் விளக்கு ஒன்றுக்குப் பன்னிரு கழஞ்சாக மூன்று விளக்குகளுக்கு முப்பத்தாறு கழஞ்சுப்பொன்னை முதலாம் இராசராசன் அரியணை ஏறிய பதினொன்றாம் ஆண்டில் அதாவது கி. பி. 996-ல் அளித்தார். அதை ஏற்று நடத்தியவன் ஹாஸ்யன் விக்கிரமாதித்த ராசராச நாடகப் பெரியன். நிபந்தப்படி இவன் நாள் ஒன்றுக்கு மூன்று உழக்கு நறுநெய் செலுத்தி வந்தான். இவனுக்குப் பின்



இவன் குமாரர்களும், அவர்களுக்குப் பின் அவர்கள் மருமகனும், நடத்திய பின்னர் பலர் அந்த உரிமையை விலைக்கு வாங்கியும், அத்தர்மத்தைச் செவ்வனே நடத்தி வந்திருக்கின்றனர். இது பன்னிரண்டாம் நூற்றாண்டு விக்கிரமசோழன் காலத்தில் மகா மண்டபம் தென் சுவரில் உள்ள கல்வெட்டு.

பந்தணைநல்லூர் ஆதிச்சப்பிள்ளை என்னும் பெருமகனார் மூன்றாம் குலோத்துங்கன் அரியணை ஏறிய இருபத்துநாலாவது ஆண்டுப் பதினாலாம் நாளில் ஆண்டவனுக்குத் திருஉத்தரீயம், பூணூல் இவைகளின் பொருட்டு எட்டு மாற்றுக் கேழஞ்சிப் பொன்னைக் கொடுத்துள்ளனர். இது மகாமண்டபத்தின் தென் புறமுள்ள மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு.

மூன்றாம் குலோத்துங்கன் அரியணை ஏறிய முப்பத்து ஒன்பதாம் ஆண்டில் வாராணசிப் பிச்சைமடத்து ஒருவர் ஆண்டவனுக்குத் திருமஞ்சன காலத்திலே சாத்துவதற்குக் குவளை செய்ய நாலு மாப்பொன்னைக் கொடுத்தருளினார். இது மூலக் கோவிலின் தென்புறமுள்ள மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு.

இராசகேசரிவர்மன் திரிபுவனசக்கரவர்த்தி இராசாதிராச தேவர் அரியணை ஏறிய ஐந்தாம் ஆண்டில் இராமேசுரமுடையான் சதாசிவ தேவனான இராசராச சகஸ்ரபாகு என்பான் திருவீதியின் பொருட்டு நிலம் வழங்கியுள்ளான். இந்தநிலம் இவனது அண்ணன் இராமேசுரமுடையான் சோழப் பல்லவராயனுடையதாகும். இது அர்த்த மண்டபத்தின் வடபுறத்திலுள்ள மேற் சொன்ன இராசாதிராச தேவரின் கல்வெட்டு.

கொள்ளிடத்துக்குத் தெற்கு, பழவாற்றுக்கு வடக்கு, திருவாப்பாடிப் பெருவழிக்குக் கிழக்கு, திருமுல்லைவாசலுக்கு மேற்கு இதற்குட்பட்ட சீமை, வயிரவநயினார்மகனார் க்ஷேத்திரபாலகருக்குக் கணக்கப்போக மாத்தூரில் ஆறுவேலி நிலத்தை கி. பி. 1530-ல் இறையிலியாகக் கொடுத்தார். இது மூலக் கருக் கோவிலின் வடபுறமுள்ள அச்சுததேவ மகாராயர் கல்வெட்டு.

ஸ்ரீ பசுபதீஸ்வரருக்காக அரசன் பரகேசரிவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி இராசராசதேவர் கோனேரின்மை கொண்டான் என்பவன் திருவாபரணம் செய்ய ஒடுக்கிவைத்திருந்த பொன்னில் ஒரு பகுதியை இக்கோவில் சிவப்பிராமணர் சிலர் கூறிட்டுக் கொண்ட குற்றத்திற்காக இச்சிவ பிராமணர்களும் அவர்கள் வம்சத்தாரும் கோவிலில் புகுதல்கூடாதென்று ஆக்ஞையிட்டு 180காசு அபராதம் விதித்துத் திருப்பணிக்குச் சேர்த்துக்கொண்டான். இக்கட்டளை இம்மன்னன் அரியணை ஏறிய ஆறும் ஆண்டு ஐம்பத்தைந்தாம் நாளில் நிகழ்ந்தது. இது மகாமண்டபம் வடபுறம் உள்ள கல்வெட்டு.

முதலாம் இராஜராஜன் காலத்தில்(கி. பி. 985–கி. பி 1012) இக்கோயிலில் நட்டுவப்பங்கு மெய்மட்டிப்பங்கு முதலியவைகளை உடையவனாக இருந்தவன் இராஜராஜ நாடகப்பிரியன் என்று பாராட்டப்படுகிறான். இராஜராஜ நாடகத்தில் இவனுக்கிருந்த பெரும்புலமையை விளக்குவதாகும் இவனுடைய இப்பட்டம்.


கல்வெட்டுக்களைப் பாதுகாத்துவந்தவிதம் :– "பழங்கல்வெட்டிற்கண்டபடி" யென்று முதலில் எழுதப்பெற்று அதன் கீழ் "ஸ்வஸ்தி ஸ்ரீ கோராஜ கேசரிவர்மற்கு யாண்டு பத்து, பந்தணைநல்லூர் பசுபதி தேவர்க்கு" என்று தொடங்கும் ஒரு கல்வெட்டு அர்த்த மண்டபத்தின் தென்புறத்தில் உள்ளது. இக்கல்வெட்டு மூலம் ஒரு கோவிலைப் புதுப்பிக்கும்போது பழைய கல்வெட்டையும் அப்படியே புதுக்கல்லில் வெட்டிவைத்துக் கோவில் கட்டும் வழக்கம் முன்பு இருந்ததாக அறியக்கிடக்கிறது.

கல்வெட்டுக்களிலிருந்து பெறப்படும் இதர குறிப்புகள்:– வழுதளம்பட்டி சாவடிக்கருகில் உள்ள ஊர்க்கோவிலுக்குக்கொடுத்த தர்மம் பற்றியதாகப் புலப்படுகிறது ஒரு கல்வெட்டு.

காலிங்கன் எல்லனது புகழைப்பாடும் கல்வெட்டுக்கள் பல இருக்கின்றன.

6 A

திருக்குளம் - காம்போச மன்னன் துறை
தொல்வினை போக்கும் புண்ணிய கட்டம்



முன்கோபுரமாம் காவியம் - இலவமரங்கள் மறைக்கின்றன.

**புராணச் சுருக்கம்.**

உலகத்தாய் மலைமகளாம் பார்வதி பந்தாட விரும்பிப்பரமனை வேண்ட அவனும் நான்கு வேதங்களையும் பந்துகளாக்கி விளையாடக் கொடுத்தருளினன். விண்ணுலகில் தோழிகளுடன் மாலை வேளையில் பார்வதியும் பந்தாடினர். விளையாட்டுக் கிடர்விளைக்க விரும்பாத ஞாயிறு புனலாடி மறையாது நீண்டபொழுது நிலைக்கலாயிற்று. அன்னைக்கு விண்ணப்பித்து உலக இயக்கத்துக்கு நேர்ந்த தடையை விலக்கச்சென்ற நாரதரையும் பின்பு நேரில் சென்ற அண்ணல் சிவபெருமானையும் அன்னையார் கவனிக்கவில்லை: விளையாட்டு உற்சாகம்போலும் அதனால் முகம் சிவந்த இறைவன் உருமாறிக் காலனை உதைத்த காலால் பந்தை எற்றி மண்ணுலகுக்கனுப்பிச் சென்றார். பந்தைக்காணாத அன்னையார் ஞானக்கண் விழிக்க, நடந்தயாவும் அறிந்து தெருண்டார். சென்று ஆண்டவனை வணங்கினர். எனினும், சபிக்கப்பட்டார் பண்பு தவறிய குற்றத்திற்காக. பின் இறைவன் ஆணைப்படி உமை பசுவுருக்கொண்டுவர, தமையன் கேசவன் மாட்டிடையனாய்ப்பின் தொடர மண்ணுலகிற்போந்து, பந்து வீழ்ந்தணைந்த கொன்றைக் காட்டில் சரக்கொன்றை மரநிழலில் சுயம்புலிங்கமாய் இருந்த புற்றின்மேல் யாருமறியாமல் கேசவனுங்கூட அறியாதபடி பாலைச் சொரிந்து வழிபட்டுக் காட்டில் மேய்ந்து வாழ்ந்து வந்தனர். கேசவனும் உறுதுணையாய் மாட்டிடையனாக அறச்சேரி கிராமக் காட்டிலோர் புறம் தவம் செய்துவந்த கண்ணுவமுனிவர் ஆச்சிரமத்தில் அடுத்துக் காலங்கழிக்கலாயிற்று.

தன் ஆச்சிரமநிழலில் அண்டிவாழும் மாட்டிடையனும் கேசவன் தன் பூசனைக்குப் பால்கொடாத நிலையில் கண்ணுவமுனிவர் உசாவ, கேசவனும் பின்பு பசுவைக் கவனிக்கலானான். ஒருநாள் கொன்றைக்காட்டிலே சுயம்புலிங்கத்தின்மேல் பால்சொரியும் தன் பசுவைக்கண்ட கேசவன் கோலால் அடிக்க அதுவும் துள்ளிப் புற்றை மிதித்தது: அன்னை தன்னுருக்கொண்டாள். பாம்பணைப் பெருமான் பந்தணைந்த காட்டில் மாட்டிடையனுரு நீங்கி, ஆதி கேசவனாகி அரவமணிந்தோன் மருங்கில் கோவில் கொண்டான்.

புற்றின் முடியில், விண்ணினின்று வீழ்ந்த பந்தணைந்த சுவடும் பசுமிதித்தாக்கிய குளம்படிச் சுவடும் இன்றும் நமக்குக் காட்சி அளிக்கின்றன.

பின்னர் ஆரழல் ஏந்திய அத்தனைக்காதலித்திடும் நம்மன்னை வடக்கு நோக்கியமர்ந்து கைலாயநாதனை நோக்கித் தவங்கிடக்க, அவரும் அவளை ஏற்றுக்கொண்டனர். கண்ணுவ முனிவரும் மற்றையோரும் கண்டு தரிசிக்கத் தேவியைத் திருமணம் செய்து கொண்டு, பசுபதி என்னும் திருநாமத்தோடு இத்தலத்தே எழுந்தருளா நிற்கின்றார்.

ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள், கண்ணுவர், வாலி, இந்திரன், பிரமன், சூரியன் முதலியோர் இத்தல இறைவரைப்பூசித்து இஷ்டசித்தி பெற்றிருக்கின்றனர்.

காம்பிலி நாட்டரசன் பூபதி சூடாமணியின் மைந்தன் பிறவிக்குருடாயிருந்தான். பல தலங்களிலும் அவனை வழிபடச் செய்தான். குருடு நீங்கப்பெறாமையால், இத்தலத்து வந்து மண்ணி நதியில் நீராட்டுவித்து அப்பனையும், அம்மையையும் தரிசனம் செய்துவைக்கக் குருடு நீங்கியது. மகனுக்குப் 'பசுபதி' என்று பெயரிட்டான். சில காலம் இத்தலத்திலேயே தங்கியிருந்தான். பின்பு கடவுளருளால் தோன்றிய மணிமுடியைக் கண்ணுவரால் சூட்டப்பெற்றுத் தன் தேசத்துக்குத் திரும்பி வந்து மாமுனிவன் கட்டளைப்படி ஆலயத்திருப்பணிகளை முதன் முதல் செய்து நிறைவேற்றி வீடுபேற்றைப்பெற்றான்.

சையகிரி நாட்டின் அன்னபுரத்து மிருத்துஞ்சயன் என்னும் மறையவன் பசுவைக் கொன்ற பாவத்தால் குட்டரோகமடைந்தான். பல தலங்களில் வழிபட்டும் அது தீராது, இவண் வந்து வழிபட்டு அப்பெருநோய் நீங்கிப் பெருவாழ்வெய்தினான்.

காம்போச தேச மன்னன் காந்தன் என்பவன் ஆலயத்தின் எதிரிலுள்ள சூரிய தீர்த்தத்தில் முழுகி, ஒரு மண்டலம் தங்கி, இறைவனைப் பூசித்துத் தன் நோய் நீங்கப்பெற்றான்.



வித்தியாவதி என்ற விலைமகள், இச்சூரியதீர்த்தத்தில் மூழ்கி, ஆண்டவனை வழிபட்டுப் பாவம் நீங்கப்பெற்றுப் பேரின்ப வீடெய்தினாள்.

துருவ தேச மன்னன் வீரதுரந்தரன் இத்தலத்தில் வந்து வழிபட்டு மக்கட்பேறெய்தினான்.

நிற்க, காட்டில் ஆண்டவன் புற்றுருவினனாக விளங்கினான். விண்ணகத்துப் பந்தும் மண்ணகத்துப் புற்றின்மீது வீழ்ந்தது. அன்று புற்றின்மீது கோயிலில்லை. காம்பிலி அரசன் கோவில் கட்டினான். பின்பு கோவிலைப்பெரிதாக்கிக் கருங்கல்லால் கட்டியது யார்? விண்ணேறிய கோபுரங்களைச் சமைத்தது யார்? கோட்டையைப் படைத்தது யார்? ஆழ்ந்த அகழிகளையும் மாய்ந்து வரும் மாடமாளிகைச் சின்னங்களையும், பொறியெறியும் கற்குண்டுகளையும் கண்டோர் திக்கெட்டிலும் புகழ்படைத்த சோழர் குலமே ஆம், என்றால் சிந்தையெல்லாம், தோள்களெல்லாம் பூரிப்பால் விம்முமன்றோ! ஆராய்ச்சியாளர்க்குப் பந்தணைக் கோட்டையிலே ஒரு பெருவிருந்து உண்டு.

“ ஆர்க்கிமிடீஸ் என்பவர் சைரக்யூசில் உரோமரது முற்றுகையை எதிர்க்கப் பலவகை எந்திரங்களைப் கண்டுபிடித்தார். அவையெல்லாம் “ யவனப்பொறிகள் ” என்ற பெயரோடு தமிழ் நாட்டுக் கோட்டைகளில் இடம் பெற்று விளங்கின ” என்று திரு தெ. பொ. மீ. அவர்கள் கூறுகின்றனர். மண்ணுக்கடியில் பந்தணைக்கோட்டையில் ஆயிரக்கணக்கில் அடுக்கடுக்காய்ப் புதைந்து கிடக்கும் கற்குண்டுகள் சுமார் 9 ரகங்களும் இங்கு வைக்கப்பட்ட சோழர் காலத்து யவனப்பொறிகள் எறிவதற்காகச் சேகரித்த குண்டுகளோ? அறியேம். புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவிற்கு இச்செய்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் காலம் விளக்கும்வரை பொறுத்திருப்போம். அக்கற்குண்டுகளிற்சில பொதுமக்கள் பார்த்து மகிழும்படி காட்சியாக நிலைப் பெட்டியில் அடுக்கிவைக்கப்பட்டுள்ளன.

பதிகங்கள்:- ஆறும் நூற்றாண்டில் அப்பராகிய நாவுக்கரசர் பத்துத் திருத்தாண்டகங்களில் எம்பிரான் பசுபதிமேல் அமுதப் பிரவாகம் பொழிந்திருக்கிறார்; அள்ளிக்குடிப்பீர்.

அதேகாலத்திலே தமிழ் ஞானசம்பந்தர் சரக்கொன்றை நிழலில் அமர்ந்த சீதமதிச்சடையோனை, வண்டிருந்து பண்பாடும் பந்தணைநல்லூர் எம்பெருமானை, குளிர்வாயால் தண்டமிழால் குளிர்வித்த பதிகங்கள் பத்தும் செந்தமிழ்க்கிலக்கியமாய்ச் செறிந்துகிடக்கின்றன. நாத்திக வெப்பத்தில் புழுங்குவோர் தங்க அவையெல்லாம் தருநிழலாம் என்பதில் ஐயமில்லை.

பதினைந்தாம் நூற்றாண்டில் அருணகிரியார் இத்தலத்து இறைவன் மருங்கில், தினைவனந்தனில் வாழ்வளி நாயகி வளர்தனம்புதை மார்பழகனும், கிளிமொழி மங்கையிருவர் மருங்கில் நிற்கச் செம்பொன் மாமயிலேறிய கோலனைக் காட்சியளிக்கும் ஆறுமுகப்பிரானை ஏழு திருப்புகழ்களில் அள்ளூறப் பாடி ஆனந்த பரவசராய் அமுதமந்திர ஞானோபதேசம் வேண்டிப் பிரார்த்தித்து இசைவெள்ளத்தின் மடைதிறந்துவிட்டிருக்கிறார்; மூழ்குவோர் மூழ்குக.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமரச சன்மார்க்கத்தை வளர்த்த அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அன்பு வள்ளல் இராமலிங்கசுவாமி எம்பிரான்மேல் இரண்டு வரிகளிலே தமிழ் முழக்கம் செய்துவிட்டார். அவ்வொலியை என்றென்றும் காதுளோர் கேட்க, கருத்துளோர் உணர்க.

மற்றும் சமீபகாலத்தில் திருப்பட்டீஸ்வரம் ஸ்ரீ மௌன குரு ஸ்வாமிகள் பந்தணைந்த பெருமானை உள்ளம் நெக்குருகும் பதினொருபாக்களாலும், காம்பனைய தோளியைப் பன்னிரண்டு பெரும்பாக்களாலும் குழைந்து பாடியருளியிருக்கிறார் இவ்வைவர் பாடல்களும் அன்பையும், சமயப்பற்றையும், இன்தமிழையும் குழைத்தூட்டவல்ல இசைப்பாக்களாய் இருக்கின்றன.



வண்டிருந்து பண்பாடிக் கொண்டிருக்கும்
பந்தணை நல்லூர் எம்பெருமான்



மக்களிசைக்கும் செல்லப்பெயர் - பசுபதியார்

காதலாகிக் கசிந்து, கண்ணீர்மல்கி, ஓதியுணர்ந்து மக்கள் நன்னெறியில் உய்யச் சிறந்த அமுதமயமாய்ச் சமயகுரவர்கள் நமக்கு அளிக்கப்பட்டவை தேவார திருவாசகங்களே.

" இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று "

திருச்சிற்றம்பலம்.

௨

# திருப்பந்தணைநல்லூர்

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

## தேவாரம்

### பண்–புறநீர்மை

*திருச்சிற்றம்பலம்*

இடறினார் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை
யிவைசொல்லி யுலகெழுந் தேத்தக்
கடறினா ராவர் காற்றுளா ராவர்
காதலித் துறைதரு கோயில்
கொடிறனார் யாதுங் குறைவிலார் தாம்போய்க்
கோவணங் கொண்டு கூத்தாடும்
படிறனார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [1]

சுழியுளா ரெனவுங் கடலுளா ரெனவுங்
காட்டுளார் நாட்டுளா ரெனவும்
வழியுளா ரெனவு மலையுளா ரெனவு
மண்ணுளார் விண்ணுளா ரெனவுஞ்
சுழியுளா ரெனவுஞ் சுவடுதா மறியார்
தொண்டர்வாய் வந்தன சொல்லும்
பழியுளார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [2]



காட்டினா ரெனவு நாட்டினா ரெனவுங்
கடுந்தொழிற் காலனைக் காலால்
வீட்டினா ரெனவுஞ் சாந்தவெண் ணீறு
பூசியோர் வெண்மதி சடைமேற்
சூட்டினா ரெனவுஞ் சுவடுதா மறியார்
சொல்லுள சொல்லுநால் வேதப்
பாட்டினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [3]

முருகினார் பொழில்சூ ழுலகினா ரேத்த
மொய்த்தபல் கணங்களின் றுயர்கண்
டுருகினா ராகி யுறுதிபோந் துள்ள
மொண்மையா லொளிதிகழ் மேனி
கருகினா ரெல்லாங் கைதொழு தேத்தக்
கடலுணஞ் சமுதமா வாங்கிப்
பருகினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [4]

பொன்னினார் கொன்றை யிருவடங் கிடந்து
பொறிகிளர் பூணநூல் புரள
மின்னினா ருருவின் மிளிர்வதோ ரரவ
மேவுவெண் ணீறுமெய் பூசித்
துன்னினார் நால்வர்க் கறமமர்ந் தருளித்
தொன்மையார் தோற்றமுங் கேடும்
பன்னினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [5]

ஒண்பொனா ரனைய வண்ணல்வாழ் கெனவு
முமையவள் கணவன் வாழ்கெனவும்
அண்பினார் பிரியா ரல்லுநன் பகலு
மடியவ ரடியிணை தொழவே
நண்பினா ரெல்லாம் நல்லரென் றேத்த
வல்லவர் தீயரென் றேத்தும்
பண்பினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [6]

எற்றினா ரேது மிடைகொள்வா ரில்லை
யிருநிலம் வானுல கெல்லை
தெற்றினார் தங்கள் காரண மாகச்
செருமலைந் தடியிணை சேர்வான்
முற்றினார் வாழு மும்மதில் வேவ
மூவிலைச் சூலமு மழுவும்
பற்றினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [7]

ஒலிசெய்த குழலின் முழவம தியம்ப
வோசையா லாட லறாத
கலிசெய்த பூதங் கையினா லிடவே
காலினாற் பாய்தலு மரக்கன்
வலிகொள்வர் புலியி னுரிகொள்வ ரேனை
வாழ்வுநன் றானுமோர் தலையில்
பலிகொள்வர் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [8]

சேற்றினார் பொய்கைத் தாமரை யானுஞ்
செங்கண்மா லிவரிரு கூறாத்
தோற்றினார் தோற்றத் தொன்மையை யறியார்
துணைமையும் பெருமையுந் தம்மில்
சாற்றினார் சாற்றி யாற்றலோ மென்னச்
சரண்கொடுத் தவர்செய்த பாவம்
பாற்றினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே. [9]

கல்லிசை பூணக் கலையொலி யோவாக்
கழுமல முதுபதி தன்னில்
நல்லிசை யாளன் புல்லிசை கேளா
நற்றமிழ் ஞானசம் பந்தன்
பல்லிசை பகுவாய்ப் படுதலை யேந்தி
மேவிய பந்தணை நல்லூர்
சொல்லிய பாடல் பத்தும்வல் லவர்மேற்
றொல்வினை சூழகி லாவே. [11]


*திருச்சிற்றம்பலம்.*

---

இத்திருப்பதிகத்தில் பத்தாவது செய்யுள் மறைந்து போயிற்று.



**வாரக்கூட்டு வழிபாட்டினர்**
**சரக்கொன்றை யடியிலே**



"வாழ்க! நீவிர், நீடூழி வாழ்க!!"

உ

திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த

# தேவாரம்

## திருத்தாண்டகம்

112811

*திருச்சிற்றம்பலம்*

நோதங்க மில்லாதார் நாகம் பூண்டார்
நூல்பூண்டார் நூன்மேலோ ராமை பூண்டார்
பேய்தங்கு நீள்காட்டி னட்ட மாடிப்
பிறைசூடுஞ் சடைமேலோர் புனலுஞ் சூடி
ஆதங்கு பைங்குழலாள் பாகங் கொண்டார்
அனல்கொண்டா ரந்திவாய் வண்ணங் கொண்டார்
பாதங்க நீறேற்றார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [1]

காடலாற் கருதாதார் கடனஞ் சுண்டார்
களிற்றுரிவை மெய்போர்த்தார் கலன தாக
ஓடலாற் கருதாதா ரொற்றி யூரார்
உறுபிணியுஞ் செறுபகையு மொற்றைக் கண்ணால்
பீடுலாந் தனைசெய்வார் பிடவ மொந்தை
குடமுழவங் கொடுகொட்டி குழலு மோங்கப்
பாடலா ராடலார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [2]

பூதப் படையுடையார் பொங்கு நூலார்
புலித்தோ லுடையி னார்போ ரேற்றினார்
வேதத் தொழிலார் விரும்ப நின்றார்
விரிசடைமேல் வெண்டிங்கட் கண்ணி சூடி

O.23:132.21173.TR
N56

ஓதத் தொலிகடல்வாய் நஞ்ச முண்டார்
உம்பரோ டம்பொன் னுலக மாண்டு
பாதத் தொடுகழலார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [3]

நீருலாஞ் சடைமுடிமேற் றிங்க ளேற்றார்
நெருப்பேற்றா ரங்கையி னிறையு மேற்றார்
ஊரெலாம் பலியேற்றா ரரவ மேற்றார்
ஒலிகடல்வாய் நஞ்ச மிடற்றி லேற்றார்
வாருலா முலைமடவாள் பாக மேற்றார்
மழுவேற்றார் மான்மறியோர் கையி லேற்றார்
பாருலாம் புகழேற்றார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [4]

தொண்டர் தொழுதேத்துஞ் சோதி யேற்றார்
துளங்கா மணிமுடியார் தூய நீற்றார்
இண்டைச் சடைமுடியா ரீமஞ் சூழ்ந்த
இடுபிணக் காட் டாடலா ரேமந் தோறும்
அண்டத்துக் கப்புறத்தா ராதி யானார்
அருக்கனா யாரழலா யடியார் மேலைப்
பண்டை வினையறுப்பார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [5]

கடமன்னு களியானை யுரிவை போர்த்தார்
கானப்பேர் காதலார் காதல் செய்து
மடமன்னு மடியார்தம் மனத்தி லுள்ளார்
மானுரிதோன் மிசைத்தோளார் மங்கை காண
நடமன்னி யாடுவார் நாகம் பூண்டார்
நான்மறையோ டாறங்க நவின்ற நாவார்
படமன்னு திருமுடியார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [6]

முற்றா மதிச்சடையார் மூவ ரானார்
மூவுலகு மேத்து முதல்வ ரானார்
கற்றார் பரவும் கழலார் திங்கள்
கங்கையாள் காதலார் காம்பேய் தோளி



பற்றாகும் பாகத்தார் பால்வெண் ணீற்றார்
பான்மையா லூழி யுலக மானார்
பற்றார் மதிலெய்தார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [7]

கண்ணமரு நெற்றியார் காட்டார் நாட்டார்
கனமழுவாட் கொண்டதோர் கையார் சென்னிப்
பெண்ணமருஞ் சடைமுடியார் பேரொன் றில்லார்
பிறப்பிலா ரிறப்பிலார் பிணியொன் றில்லார்
மண்ணவரும் வானவரும் மற்றை யோரும்
மறையவரும் வந்தெதிரே வணங்கி யேத்தப்
பண்ணமரும் பாடலார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [8]

ஏறேறி யேழுலகு மேத்த நின்றார்
இமையவர்க ளெப்பொழுது மிறைஞ்ச நின்றார்
நீறேறு மேனியார் நீல முண்டார்
நெருப்புண்டா ரங்கை யனலு முண்டார்
ஆறேறு சென்னியா ரானைஞ் சாடி
யனலுமிழு மைவா யரவு மார்த்தார்
பாறேறு வெண்டலையார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [9]

கல்லூர் கடிமதில்கண் மூன்று மெய்தார்
காரோணங் காதலார் காதல் செய்து
நல்லூரார் ஞானத்தார் ஞான மானார்
நான்மறையோ டாறங்க நவின்ற நாவார்
மல்லூர் மணிமலையின் மேலி ருந்து
வாளரக்கர் கோன்றலையை மாளச் செற்றுப்
பல்லூர் பலிதிரிவார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தணை நல்லூராரே. [10]

திருச்சிற்றம்பலம்.

உ

**திருப்பட்டீசுவரம்**
**ஸ்ரீ-ல-ஸ்ரீ மௌனகுருசுவாமிகள்**
**திருவாய்மலர்ந்தருளிய**

# திருப்பந்தணைநல்லூர் பசுபதீசுரர் பதிகம்

**கலிவிருத்தம்**

பந்தணை நல்லூர்ப் பசுபதி யடியிணை
சிந்திக்க மனமே தீவினை தீரும்
அந்தியும் பகலு மன்புடன் வாழ்த்தி
வந்தனை புரிய வன்றுயர் போமே. [1]

காலனைக் காய்ந்த கழலிணை சிந்தி
யாலமு துண்டே யன்பரை யன்று
பாலனஞ் செய்த பந்தணை நல்லூர்
மூல னெதிர்ந்து முத்தியீ டுவனே. [2]

சித்த விகற்பச் செயலதை விட்டுச்
சத்திய மாகச் சந்ததம் வாழ்க
பத்தி புரிவாய் பந்தணை நல்லூர்
அத்தன் கருணை யளிப்பவ னன்றே. [3]

வன்பிணி தீர மலரடி சிந்தி
பொன்புரை கொன்றை புனற்சடை சூடி
நன்குறு பந்தணை நல்லூர் நாதன்
அன்பினைக் கண்டே யருள்செய் குவனே. [4]

இன்னஞ் செனன மெடுக்கா தீங்கும்
பன்னும் பந்தணை நல்லூர்ப் பரனே
பொன்னடி சேர்ந்து போற்றும் பொருட்டே
யுன்னுவ னியானு முணர்ந்தருள் புரியே. [5]



**அன்னையராடிய பந்தா!**



**— அன்றிச் சோழன்
பகைமேலெறிந்த குண்டா!!**

தீதே புரியுஞ் சிறியே னுனது
பாதாம் புயத்தைப் பந்தணை நல்லூர்
தாதா பணியத் தந்தருள் புரிவாய்
வேதா வணங்கும் விரைமலர்ப் பதனே. [6]

திங்களு மரவு மத்தமுஞ் செஞ்சடை
கங்கையுஞ் சூடிய கண்ணுத லேயென்
பங்கம தகற்றிப் பந்தணை நல்லூர்ச்
சங்கர னேயுன் றுளிணை சேரே. [7]

அடியேன் றுயர முழுது மறிவை
கொடியேன் மொழியாற் கூறிற் பயனென்
படிபுகழ் பந்தணை நல்லூர்ப் பரனே
கடிகமழ் காலென் முடியிற் பொறியே. [8]

வினையேன் வினைப்பயன் றீரா விடிலோ
அணைநிகர் பந்தணை நல்லூர்க் கரசே
தனியே கிடந்து தளர்ந்துமுன் சாவேன்
இனிதருள் புரிந்துன் னிணையடி சேரே. [9]

மந்திர மானவைந் தெழுத்தினை நெஞ்சிற்
சிந்தித் தனுதினஞ் செபித்தவர் நாளும்
பந்தம தொழிந்து பந்தணை நல்லூர்ச்
சுந்தரன் சேவடி துன்னுவர் சுகமே. [10]

வாதமும் பித்தமு மன்னு சிலேத்மமும்
வேதனை செய்ய மெலிவினை யுற்றேன்
கோதறு பந்தணை நல்லூர்க் குழகா
வாதனை தீர மாற்றுதல் கடனே. [11]

திருச்சிற்றம்பலம்.

உ

**திருப்பட்டீசுவரம்**

**ஸ்ரீலஸ்ரீ மௌனகுருசுவாமிகள்**

**திருவாய்மலர்ந்தருளிய**

# திருப்பந்தணைநல்லூர் காம்பணையதோளியம்மை பதிகம்

பூமாது நாமாது செயமாது சசிமாது
 பொருவிலாத் துர்க்கைகாளி
புகழ்கின்ற பூரணி நாரணி யபிராமி
 பொற்பிற் சிறந்தவல்லி
ஓமாதி மந்திரம துருவாகி யருவாகி
 யுலகெலாம் பூத்தசெல்வி
யுயிரினுக் குயிராகி விளங்குநல் லம்பிகை
 யுன்னுமடி யேனையுற்ற
காமாதி விகாரங்கள் முழுதுமே நீங்கிடக்
 கண்மலர்கள் சாத்தியுன்றன்
கழலிணைகள் பரவவே நல்வாக் களித்துநற்
 காட்சிதந் தாண்டருளுவாய்
பாமாலை சூடுநல் லன்பரைக் காக்கின்ற
 பராசத்தி பத்ரகாளி
பந்தணைநல் லூரிலமர் காம்பணைய தோளியே
 பரமசுக மருளுமுமையே [1]

சதுர்மறைக ளோலமிடு திருவருட் செல்வியே
 சரணம்பு யத்தைநாளுந்
தந்தென்னை ரட்சிக்க விரும்பியே நின்றனன்
 சத்யமிது சத்யமிதுகாண்



பொதுவதனி னடனமிடு நின்கணவ னேயுனது
 பொற்பினைக் கண்டெநாளும்
பூமிதனில். வையாது தனதுமடி மீதினிற்
 பொலிவுற விருத்தலாலுன்
விதவலங் காரமதை யெளியனாற் புகலவே
 விளங்காது சொல்வதென்னை
வித்தையறி வார்களு மவரவர்க் கியன்றபுகழ்
 விரும்பியே துதிப்பர்கண்டாய்
பதியதனி லிப்பதிபோ லெப்பதியு மிலையெனப்
 பசுபதியு மெற்றிவிட்ட
பந்தணைநல் லூரிலமர் காம்பணைய தோளியே
 பரமசுக மருளுமுமையே. [2]

அன்னையே நின்சொரூப ஞானத்தி னழகோடு
 மற்புதக் காட்சியழகும்
ஆடையணி திருமேனி யவயவத் தழகினையு
 மறிவிலேன் புகழ்வதற்கே
பின்னுசடை முடியிலுறு பொன்மகுட வழகினொடு
 பிறைநுதற் றிலதவழகும்
பிறங்குநின் காதுகளி லுறுதோட்டி னழகோடு
 பேசுமுக் கணியினழகும்
மன்னுதிருக் கண்டமுறு பொட்டழகு சரட்டழகு
 மாருத தாலியழகும்
மார்பிலுறு பதக்கமும் வளர்கரக் காப்பழகும்
 வளையிடையி னொட்டியாணமும்
பன்னரிய பாதமுறு சிலம்பினொடு கொலுசழகும்
 பார்த்துக் களிக்கவருவாய்
பந்தணைநல் லூரிலமர் காம்பணைய தோளியே
 பரமசுக மருளுமுமையே. [3]

இருநாழி நெற்கொண்டு முப்பத் திரண்டறமு
 மெக்காலும் வளர்க்குமுன்றன்
இருகையி னலெனையு மெடுத்தமு தருத்தியே
 யினிதான மடியில்வைத்தே

பெரிதான பித்தநோய் சூலைநோய் குன்மநோய்
பேசரிய நோய்களெல்லாம்
பீடித்து வாட்டாமல் நீங்கும் படிக்குநின்
பெருங்கருணை நோக்கம்வைப்பாய்
நரிநாய்க ளுண்ணுமிவ் வுடலதனை மெய்யென்று
நாளுமபி மானமுற்றே
நாடதனில் வாழ்ந்துமெய்ஞ் ஞானநிலை யுணராத
நலமிலா மூர்க்கருடனே
பரிவோடு திரிந்துமென் பயனுறு மவர்களது
பக்கத்தி லெனைவிடாதே
பந்தணைநல் லூரிலமர் காம்பணைய தோளியே
பரமசுக மருளுமுமையே. [4]

நல்லவரு டுருவையோ நாயேனு முய்வனோ
ஞானவடி வானவம்மே
நவில்காமக் குரோதலோ பங்களை யடைந்துநா
ளெலாம் போக்கிநின்றேன்
சொல்லரிய சரியைநற் கிரியையோகங்களொடு
தூஞான சுகமேவிலேன்
சுத்தபரி பூரணி நித்யகல் யாணிநற்
சூட்சும சொருபிநீயே
வெல்லரிய மாயைதனி லென்னையிட் டாட்டியே
விளையாடல் செய்யவேண்டா
வேதவொலி பாடுநின் பாதமதி லெந்நாளும்
வினையேனை வைக்கவேண்டும்
பல்லுலகர் வாழ்த்தியுய்ந் ததுகண்டு நின்னடி
பரவினே னருள்புரிகுவாய்
பந்தணைநல் லூரிலமர் காம்பணைய தோளியே
பரமசுக மருளுமுமையே. [5]

வேதநெறி கன்மநெறி பத்திநெறி நின்றிலேன்
மெய்ஞ்ஞான நெறியுமறியேன்
விளங்குபல தர்மங்கள் செய்திலே னன்றாக
இருபுண்ய பாவமறியேன்



‘‘தங்கும் வெளியினில் கோடியண்டம்-இந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா!’’



மக்களிசைக்கும் செல்லப்பெயர்-தோளியம்மை

ஓதரிய தீவினைகள் செய்தபய ஞுடுமிவ்
    வுடம்பினை யெடுத்துநாளும்
உழலனு பவத்தினை னன்று வறிந்தனன்
    உன்னடிக் கன்புபூணேன்
காதளவு நீடிருக் கண்ணியே மங்கையர்க்
    கரசியே கருணையாலே
கடையேனு நின்னடிக் கன்புசெயும் வண்ணமே
    கடாட்சம்வைத் தாளுகண்டாய்
பாதமலர் நாடுநற் பத்தருக் கருள்செயும்
    பரமகல் யாணரூபி
பந்தணைநல் லூரிலமர் காம்பணைய தோளியே
    பரமசுக மருளுமுமையே [6]

வேதவொலி கீதவொலி யாடலொலி பாடலொலி
    மேவுநின் கோயில்வந்து
விண்ணவர்கள் மண்ணவர்கள் பண்ணவர்க ளியாருமுன்
    மெல்லடி பணிந்துவாழச்
சோதிவடி வாகவே விளங்குநல் லம்பிகை
    சுகரூப மானவல்லி
சொல்லரிய நால்வேத வுச்சியில் விளங்குநற்
    சொரூபியே கருணைசெய்வாய்
சீதமதி வெவ்வரவு குளிர்மத்த மொடுசெறி
    செழுங்கொன்றை முடியிலுற்றே
திகழவிரு கரமதனின் மழுமா னணிந்தவன்
    தேவியுனை யிடத்தில்வைத்தே
பாதங்கள் நோவா திருக்கச் சமைக்கின்ற
    பட்சம்நின் மகிமையலவோ
பந்தணைநல் லூரிலமர் காம்பணைய தோளியே
    பரமசுக மருளுமுமையே. [7]

மருந்தொன்று மில்லையோ பொருந்துநோய் தீர்க்கவுய்
    மனமதிற் கருணையில்லையோ
வஞ்சனே னென்னினும் மஞ்சினே னஞ்சினேன்
    வன்பிணிக் காற்றகில்லேன்

அருந்தவர்க் கிரங்கிநல் லருள்புரியு மம்பிகை
    அமரர்பணி கின்றவம்மே
அன்றுவளர் காழியர் கவுணியக் கன்றினுக்
    கருண்ஞான வமுதமுதவி
இருந்தமிழ் வேதமுறை பாடிடக் கேட்டுநல்
    லின்புற்றிருந்த தாயே
எளியனுக் கிரங்கியே கருணைநோக் கிறைலெனக்
    குறுபிணி யகற்றியாள்வாய்
பரிந்துநா வரையருறு சூலைமுன் தீர்த்தநின்
    பட்சம தெனக்கும்வைப்பாய்
பந்தணைநல் லூரிலமர் காம்பனைய தோளியே
    பரமசுக மருளுமுமையே. [8]

தேவர்கண் முனிவர்க ளசுரர்கள் சித்தர்கள்
    திருந்துவிஞ் சையர்களோடு
சீர்பெற்ற கந்தருவர்மா புத்திசாலிகள்
    திகழ்திசைப் பாலரெல்லாம்
ஆவலுடன் வந்துநின் னடியிணை பணிந்திட
    அவரவர் குறைகளெல்லாம்
அறைந்திடக் கேட்டுநீ யருள்செய்த தாகவே
    அனந்தமறை சொல்வதம்மா
பூவுலகி னுயினேன் வெம்பிணியி னுல்வெம்பிப்
    பொறுக்கமுடி யாமலேயுன்
பொன்னடிக் கனுதினஞ் சொல்லுவ தறிந்துமது
    போகும்வழி கண்பார்த்திலாய்
பாவியே னென்னினு மன்னையே யுன்னையே
    பற்றினே னென்னையாள்வாய்
பந்தணைநல் லூரிலமர் காம்பனைய தோளியே
    பரமசுக மருளுமுமையே. [9]

சந்தக மன்பர்பலர் வாழ்த்துமுன் றுளிணை
    தஞ்சமென நம்பிவந்தே
தமியனேன் மனக்குறைகள் சாற்றியே போற்றியுந்
    தானுள மிரங்கவிலையே



கந்தமலர் கொண்டுநின் னடிபணியு மன்பருக்
    கருள்புரியு மெய்த்தெய்வமே
கடையனே னென்னினு முனதுதிரு வருட்பார்வை
    காட்டவிது சமயமம்மே
மந்த்ரமிகு நவகோண நாயகி திருவாணி
    மலரயன் முதல்தேவர்கள்
கதிபெறுநின் மலர்ப்பாத மென்றலை வைத்தருளை
    யுதவுமா னந்தவல்லி
பந்தமிகு மடியனேன் துயரோட்டு மாரணி
    பட்சமிகு முமையம்மையே
பந்தணைநல் லூரிலமர் காம்பனைய தோளியே
    பரமசுக மருளுமுமையே. [10]

அளவிலா வேதமுத லாகம புராணமும்
    அனந்தவிதி காசமெல்லாம்
அம்மைநின் நிலைமையை யளக்கமுடி யாததா
    லடங்கியுன் பதமலரிலே
உளருகிற வெற்றுரையு முண்மைநிலை காணு
    துரைக்கினும் பயனுயாகா
உண்மைநிலை காணவே நின்கிருபை யாலெனக்
    குண்மையை யுணர்த்தவேண்டும்
களவுவஞ் சனைகள்செய் கருமிகளு முன்றனது
    கடாட்சவீட் சணியமுற்றே
கருதரிய பேரின்ப நிலைகண்டு கொள்வார்கள்
    கடையேனு முய்யவெண்ணிப்
பளபளென வொளிருநின் சொரூபவொளி காட்டியே
    பட்சமுட னென்னையாள்வாய்
பந்தணைநல் லூரிலமர் காம்பனைய தோளியே
    பரமசுக மருளுமுமையே. [11]

மனமதனில் மேவிய விகாரம தடங்கியே
    மாசறு மனத்திலுன்
மலரடியை யனுதினம் நினைந்துநா னுய்யவும்
    மாசற்ற வரமருளுவாய்


நினைவதனி லுறுகின்ற வினியபொருள் யாவையும்
　　நின்மாயை யென்றுதள்ளி
நித்தியா னந்தசுக நிலையிலே நிற்கின்ற
　　நின்னடிய ரேவல்செய்து
வினவரிய மெய்ஞ்ஞான வித்தைகண் டுய்யுமா
　　விண்ணுளோ ரெவரும்வந்து
விரும்பிடும் நின்பாத வின்பதனை விட்டியான்
　　விடயமதி லுழலாமலே
பனகவணை மேற்றுயி லரியயன் போற்றிடும்
　　பசுபதிக் குகந்தசத்தி
பந்தணைநல் லூரிலமர் காம்பனைய தோளியே
　　பரமசுக மருளுமுமையே.

திருச்சிற்றம்பலம்

———



கிளிமொழி மங்கையரிருவர் மருங்கில் நிற்கச்
செம்பொன் மாமயிலேறிய கோலன்



ஆறுமுகப்பெருமான்

உ

திருப்பந்தணைநல்லூர்

# முருகக் கடவுள் மீது

ஸ்ரீ அருணகிரிநாதர் இயற்றியருளிய

## திருப்புகழ்

### விநாயகர் துதி

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன தனதான

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் — அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக எனவினை — கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய — மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு — பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய — முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த — அதிதீரா
அத்துய ரதுகெட சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை — இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் — பெருமாளே.

தனதந்தன தனதந்தன தனதந்தன தான
தனதந்தன தனதந்தன தனதந்தன தான
தனதந்தன தனதந்தன தனதந்தன தான
— தனதான

இதசந்தன புழுகுஞ்சில மணமுந்தக வீசி
யணையுந்தன கிரிகொண்டிணை யழகும்பொறி சோர
இருளுங்குழல் மழையென்பந வரசங்கொளு மோகக்
— குயில்போலே

இடையுங்கொடி மதனன்தனை யிடுகுந்தள பார
இலையுஞ்சுழி துடைரம்பையு மமுதந்தட மான
இயலங்கடி தடமும்பொழி மதவிஞ்சைகள் பேசித்
— தெருமீதே

பதபங்கய மணியும்பரி புரமங்கொலி வீச
நடைகொண்டிடு மயிலென்பன கலையுஞ்சுழ லாடப்
பரிசும்பல மொழியுஞ்சில கிளிகொஞ்சுகை போலப்
— பரிவாகிப்

பணமுண்டென அவலம்படு நினைவுண்டிடை சோர
இதுகண்டவர் மயல்கொண்டிட மனமுஞ்செயல் மாறப்
பகலுஞ்சில இரவுந்துயில் சிலவஞ்சகர் மாயைத்
— துயர்தீராய்

திதிதிந்திமி தனதந்தன டுடுடுண்டுடு பேரி
டகுடங்குகு டிகுடிங்குகு படகந்துடி வீணை
செகணஞ்செக வெனவும்பறை திசையெங்கினு மோதக்
— கொடுசூரா

சிரமுங்கர வுடலும்பரி யிரதங்கரி யாளி
நிணமுங்குடல் தசையுங்கட லெனசெம்புன லோடச்
சிலசெயபுகள் கழுகுஞ்சிறு நரியுங்கொடி யாடப்
— பொரும்வேலா

மதவெங்கய முரிகொண்டவா மழுவுங்கலை பாணி
யிடமன்பொடு வளருஞ்சிவை புகழ்சுந்தரி யாதி
வளருந்தழ லொளிர்சம்பவி பரைவிண்டிள தோகை
— தருசேயே



வதனஞ்சசி யமுதம்பொழி முலைநன்குற மாதொ
டிசையுஞ்சுரர் தருமங்கையொ டிதயங்களி கூர
வருபந்தணை நகர்வந்துறை விமலன்குரு நாதப்
— பெருமாளே. [1]

தனதன தந்த தனதன தந்த தனதன தந்த
— தனதான

இருவினை யஞ்ச வருவினை கெஞ்ச
இருள்பிணி துஞ்ச — மலமாய
எனதிடர் மங்க வுனதருள் பொங்க
இசைகொடு துங்க — புகழ்கூறித்
திருமுக சுந்த்ர முருகக டம்ப
சிவசுத கந்த — குகவேலா
சிவசிவ என்று தெளிவுறு நெஞ்சு
திகழந டஞ்செய் — கழல்தாராய்
மருதொடு கஞ்ச னுயிர்பலி கொண்டு
மகிழரி விண்டு — மருகோனே
வளைதபுரி கின்ற நிசிசரர் குன்ற
வலம்வரு செம்பொன் — மயில்வீரா
அருகுறு மங்கை யொடுவிடை யுந்து
மமலனு கந்த — முருகோனே
அருள்செறி பந்த ணையிலிரு மங்கை
அமளிந லங்கொள் — பெருமாளே. [2]

தனன தந்தன தானன தானன
தனன தந்தன தானன தானன
தனன தந்தன தானன தானன
— தனதான

எகினி னம்பழி நாடக மாடிகள்
மயிலெ னுஞ்செய லா*ரகி நேரல்குல்
இசையி டுங்குர லார்கட ளிகள் — வெகுமோகம்
எனவி ழுந்திட வார்முலை மேல்துகி
லலைய வுந்திரி வாரெவ ராயினு

* அகி = பாம்பு.

மிளகு கண்சுழல் வார்விலை வேசியர் — வலைவீசும்
அகித வஞ்சக பாவனை யால்மயல்
கொடுவி ழுந்திட ராகமு நோய்பிணி
யதிக முங்கொடு நாயடி யேனினி — யுழலாமல்
அமுத மந்திர ஞானொடு தேசமு
மருளி யன்புற வேமுரு காவென
அருள்பு குந்திட வேகழ லார்கழ — லருள்வாயே
ககன விஞ்ஞைசயர் கோவென வேகுவ
டவுணர் சிந்திட வேகடல் தீவுகள்
கமற வெந்தழல் வேல்விடு சேவக — முருகோனே
கரிநெ டும்புலி தோலுடை யாரெனை
யடிமை கொண்டசு வாமிச தாசிவ
கடவு ளெந்தையர் பாகம்வி டாவுமை — யருள்பாலா
செகமு மண்டமு மோருரு வாய்நிறை
நெடிய அம்புயல் மேனிய னரரி
திருவு றைந்துள மார்பக னர்திரு — மருகோனே
தினைவ னந்தனில் வாழ்வளி நாயகி
வளர்த னம்புதை மார்பழ காமிகு
திலக பந்தணை மாநகர் மேவிய — பெருமாளே. [3]

தந்தன தனத்த தந்தன தனத்த
தந்தன தனத்த — தனதான

கும்பமு நிகர்த்த கொங்கையை வளர்த்த
கொஞ்சுகி ளியொத்த — மொழிமாதர்
குங்கும பணிக்குள் வண்புழு குவிட்ட
கொந்தள கம்வைத்த — மடவார்பால்
வம்புகள் விளைத்து நணபுகள் கொடுத்து
மங்கிந ரகத்தில் — மெலியாமல்
வண்கயி லைசுற்றி வந்திடு பதத்தை
வந்தனை செய்புத்தி — தருவாயே
பம்புந தியுற்ற பங்கொரு சமர்த்தி
பண்டுள தவத்தில் — அருள்சேயே
பைம்புய லுடுத்த தண்டலை மிகுத்த
பந்தணை நகர்க்கு — ளுறைவோனே

30 A

தேரிழுப்பதுண்டு — தெப்பமுமினி விடுவோம்



மாய்ந்துவரும் ஏ, இராணி மாடமே!
ஆற்றுவோம், தேற்றுவோம், அழகுற அமைக்கவும் செய்வோம்.

சம்புநி ழலுக்குள் வந்தவ தரித்த
        சங்கரர்த மக்கு — மிறையோனே
சங்கணி கரத்த ரும்பர் பயமுற்ற
        சஞ்சல மறுத்த — பெருமாளே. [4]

தந்ததன தந்தனந் தனதனத்
தந்ததன தந்தனந் தனதனத்
தந்ததன தந்தனந் தனதனத்
— தனதான

கெண்டைகள்பொ ருங்கண்மங் கையர்மலர்க்
கொண்டைகள் குலுங்கநின் றருகினிற்
கெஞ்சுபலு டன்குழைந் தமளியிற் கொடுபோய்வண்
கெந்தபொடி யும்புனைந் தரவணைத்
தின்பகல விகள்தருந் தொழிலடுக்
கின்றஅறி விலனுறுந் துயரற ப்ரபைவீசும்
தண்டைகள் கலின் கலின் கலினெனக்
கிண்கிணிகி ணின்கிணின் கிணினெனத்
தண்கொலுசு டன்சிலம் பசையவுட் பரிவாகிச்
சந்ததமும் வந்திடு பரிமளப்
பங்கயப தங்களென் கொடுவினைச்
சஞ்சலம லங்கெடும் படியருட் புரிவாயே
தொண்டர்கள்ச ரண்சரண் சரணெனக்
கொம்புகள்கு குங்குகுங் குகுமெனத்
துந்துமிதி மிந்திமிந் திமினெனக் குறுமோசை
சுந்தரிம ணஞ்செயுஞ் சௌரியக்
கந்தகுற வஞ்சிதங் கருவனத்
துங்கமலை யும்புரந் தமரருக் கிடர்கூரும்
பண்டர்கள்பு யங்களும் பொடிபடக்
கண்டவப்ர சண்டகுஞ் சரியெழிற்

பைந்தரு வனம்புரந் தகமெழயிற் புடைசூழும்
பந்திவரு மந்திசெண் பகமகிற்
சந்துசெறி கொன்றைதுன் றியவனப்
பந்தணையில் வந்திடுஞ் சரவணப் பெருமாளே. [5]

தானதந்ததன தானதந்ததன
தானதந்ததன தானதந்ததன
தானதந்ததன தானதந்ததன
— தந்ததான

தேனிருந்தஇத ழார்பளிங்குநகை
யார்குளிர்ந்தமொழி யார்சரங்கள்விழி
சீர்சிறந்தமுக வாரிளம்பிறைய தென்புருவர்
தேனமர்ந்தகுழ லார்களங்கமுகி
னூர்புயங்கழையி னூர்தனங்குவடு
சேர்சிவந்தவடி வார்துவண்டஇடை புண்டரீகம்
சூனியங்கொள்செய லாரரம்பைதுடை
யார்சரண்கமல நேரிளம்பருவ
தோகைசந்தமணி வாருடன்கலவி யின்பமூடே
சோகமுண்டுவினை யாடினுங்கமல
பாதமும்புயமி ராறுமிந்துளபல்
தோடலங்கலணி மார்பமும்பரிவு ளங்கொள்வேனே
ஓநமந்தசிவ ரூபியஞ்சுமுக
நீலிகண்டிகலி யாணிவிந்துவொளி
யோசைதங்குமபி ராமியம்பிகைப யந்தவேளே
ஓலமொன் றவுணர் சேனைமங்கையர்கள்
சேறுடன்குருதி யோடஎண்டிசையும்
ஓதுகெந்தருவர் பாடநின்றுநட னங்கொள்வேலா
ஏனல்மங்கைசசி ஞானரம்பையென
தாயிசந்த்ரமுக பாவைவஞ்சிகுற
மானெடும்பர்தரு மானணைந்தழகி லங்குமார்பா
ஏர்கரந்தையறு கோடுகொன்றைமதி
ஆறணிந்தசடை யார்விளங்குமெழி
வீறிருப்பந்தணைநல் லூரமர்ந்துவளர் தம்பிரானே. [6]



பந்தணைந்த காட்டில் பாம்பணிந்தோன் மருங்கில்
கோயில் கொண்ட பாம்பணைந்தோன்



ஸ்ரீ ஆதிகேசவப்பெருமானின் ஆலய முன் வாயில்

தனதந் தத்தன தனந்த தானன
தனதந் தத்தன தனந்த தானன
தனதந் தத்தன தனந்த தானன
— தனதான

மதியஞ் சத்திரு நிறைந்த மாமுக
மயிலஞ் சக்கிளி யினங்க ளாமென
மதுரஞ் செப்பிய மடந்தை மேனகை ரதிபோலே
மருவும் பொற்குட மெழுந்த மாமுலை
வளர்வஞ் சிக்கொடி நடந்த வாறென
வருதுங் கக்கட லணங்கு போல்பவர் தெருவூடே
நிதமிந் தப்படி யிருந்து வாறவர்
பொருதங் கப் T பணி கலந்து போய்வர
நெறிதந் திட்டவர் வசங்க ளாமெனவுழலாதே
நிதிபொங் கப்பல தவங்க ளால்நனி
மொழியும் புத்திகள் தெரிந்து நானுனை
நிகர்சந் தத்தமிழ் சொரிந்து பாடவு மருள்தாராய்
நதிமிஞ் சச்சடை விரிந்த நாயக
னுமையன் பிற்செயு மிகுந்த பூசனை
நலமென் றுட்குளிர் சிவன்ப ராபர னருள்பாலா
நவகங் கைக்கிணை பகர்ந்த மா+மணி
நதிபங் கிற்குல வு*கந்து காபுரி
நகர்பொங் கித்தழை யவந்து வாழ்வுறு முருகோனே
கெதிதங் கத்தகு கணங்கள் வானவ
≀ ரரிகஞ் சத்தவர் முகுந்தர் நாவலர்
கிளைபொங் கக்ருபை புரிந்து வாழ்கென அருள்நாதா
கெருவம பற்றிகல் விளைந்த சூரெனு
தளமஞ் சப்பொரு தெழுந்து தியுகள்
கிரவுஞ் சக்கிரி வகிர்ந்த வேலுள் பெருமாளே. [7]

திருச்சிற்றம்பலம். 112-811

---

T பணி = பண்ணி
+ மணிநதி = மண்ணியாறு
* கந்துகாபுரி = பந்தணைநல்லூர்
≀ அரி = இந்திரன்
கந்துகம் = பந்து

ஒஜ:ஐஐ.ஆ1193TR
~51

சிதம்பரம்

## ஸ்ரீ இராமலிங்க அடிகளார்

அருளியது

---

கொந்தணவுங் கார்குழலாள் கோலமயில் போலுலவுப்
பந்தணை நல்லூர் நின்றவெம் பசுபதியாரே.